**தலைப்பு 135 - பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெருந்தோட்ட கைத்தொழில் கைத்தொழில் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெருந்தோட்ட கைத்தொழில் கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெருந்தோட்ட கைத்தொழில் கைத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுடன் இணங்கியிருக்காமை.**

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாட்டை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு மீதி திறைசேரி கணனி அச்சுப் பிரதியின் பிரகாரம் ரூபா 15,440,833 நிதி செயலாற்று கூற்றின் ரூபா 15,279,148 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ள காரணத்தினால் அந்த மீதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 161,685 ஆக குறைத்து காட்டப்பட்டுள்ளது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு மீதி திறைசேரி கணனி அச்சுப் பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிக்கு ஏற்ப நிதிக்கூற்றுக்களில் காணப்படுதல் வேண்டும். | நான் ஒப்புக்கொள்கிறேன் எதிர்வரும் ஆண்டுகளில் இவ்வாறான நிலைமை ஏற்படாது இருக்க நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | சுற்றறிக்கை 07(i) பந்தியின் பிரகாரம் கட்டுநிதி மீதி ஒப்பிட வேண்டும். என்பதனால் கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்த கட்டு நிதி செம்மையாக்கல் | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதி மீதி ஒப்பிட வேண்டும் என்பதனால் சரியான கட்டு நிதி செம்மையாக்கல் கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டும். | உப குத்தகை வாடகை வருமானம் ரூபா 2,073,007 பெறுமதியான தொகை மற்றும் மதாந்த கணக்கு சுருக்கம் மற்றும் திணைக்கள ஏடுகளில் உள்ளடக்கப்படாத ரூபா 4,906,676,987 பெறுமதியான தொகை பொருந்தாது. வைப்பு பெறுகை பொருந்தாது குறைத்து |

| | | |
|---|---|---|
| கணக்கு மூலம் ஒப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | | கணக்கு வைத்தல் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் பெறுவனவு குறைத்து மதிப்பிடப்பட்ட தொகையின் அளவு சம்பந்தமாக குறித்த ஒப்பீடு 2019 ஆம் ஆண்டிற்குள் செய்வதற்கு உள்ளது. |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) திறைசேரி கணனி பிரிவு 70 அமைய பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்குரிய வருமான சின்னத்தின் மொத்த வருமானத் தொகை ரூபா 873,390,089 ஆக இருப்பினும் மீளாய்வாண்டின் முன் வைக்கப்பட்டிருந்த நிதி செயலாற்றல் கூற்றின்படி வருமானம் ரூபா 871,317,082 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய சேகரித்த வருமானம் கூட்டுத்தொகை ரூபா 2,073,007 ஆக குறைத்து நிதி செயலாற்று கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கு அமைய திறைசேரி கணனி அட்டவணை 70 இல் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம், வருமான கணக்கிற்கு உள்ளடக்கப்பட வேண்டும். | கணனி அச்சு பிரதியில் காலந்தாழ்த்தப்பட்ட குத்தகை வாடகை வருமானமாக ரூபா 873,390,089 என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பிரதேச பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்களின் காலந்தாழ்த்தப்பட்ட குத்தகை வாடகை வருமானமாக 2018 ஆம் வருடத்தில் அறவிடப்பட்ட தொகை ரூபா 871,317,082 ஆகும். அதில் வித்தியாசம் ஆக ரூபா 2,073,007 பெறுமதியான தொகை பிரதேச பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்களினால் மூன்றாம் தரப்பினருக்கு காணிகள் உப குத்தகைக்கு விடுதலுக்கு ஆக அரசினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நூற்றிற்கு இருபது வீத தொகையாகும். |
| (ஆ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டு காணப்பட்ட மாதாந்த கணக்கு சுருக்கம் மற்றும் திணைக்கள ஏடுகளில் உள்ளடக்கப்படாத ரூபா 4,906,676,987 பெறுமதியான தொகை வேறு வருமானம் ஆக நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டு இருந்தது. | சுற்றறிக்கை விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் அல்லது திறைசேரியின் ஆலோசனைப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | சிறிய தேயிலை மற்றும் இறப்பர் தோட்டம் புனர்வாழ்வு செயற்திட்டத்தின் மூலதனமிடல் 12 இன் கீழ் வரவு ரூபா 713,599,987 பெறுமதியாக தொகை மற்றும் அமைச்சரவை கீழ் உள்ள நிறுவனங்களுக்கான தொகை ரூபா 4,193,077,000 ஆகவும் கூட்டுத்தொகை ரூபா 4,906,676,987 ஆகும். |

**1.6.3 நிதி அறிக்கை**

-------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆம் திகதிற்கு நிதிக்கூற்றுக்களின் வைப்பு மீதி கணக்கியலின் போது திறைசேரி அச்சு பதிவின் மீதியாக ரூபா 41,017,827 ஆக பதிவு செய்வதற்கு பதிலாக திணைக்கள ஏடுகளிற்க அமைய உள்ளவாறு மீதி ரூபா 41,038,327 ஆக பதிவு செய்து இருப்பதனால் மீதி ரூபா 20,500 பெறுமதியான தொகை அதிகமாக பதியப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 267/2018 க்கு அமைய நிதி கூற்றுக்கள் தயாரிக்கும் போது வைப்பு கணக்கு மீதி திறைசேரி அச்சு பதிவின் பதியப்பட்ட மீதி ஆக வேண்டும். | நான் ஒப்புக்கொள்கிறேன் இப்பொழுத இந்த மீதிற்கு இடையே உள்ள வேறுபாடு சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. |
| (ஆ) | மீளாய்வாண்டின் ரூபா 16,850,000 பெறுமதியான 03 தவாகனம் ஏலம் விடப்பட்டு இருப்பினும் அதன் பெறுமதி நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றாமை காரணமாக 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி அறிக்கையில் சொத்து விபரம் உபகரண பெறுமதியின் தொகையின் அளவினும் அதிகமாக குறிப்பிடப்பட்டுள்ளது. | பாவித்த சொத்துக்கள் நிலையான சொத்துக்களின் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நான் ஒப்புக்கொள்கிறேன் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது எனினும், எதிர்காலத்தில் அந்த தவறு நடைபெறாது. |
| (இ) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் செயல் திட்டம் இரண்டிற்காக 2018 ஆம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தம் ரூபா 188,903 பெறுமதியான காரியாலய உபகரணம் நிலையான சொத்துக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எல்லா வகையான நிலையான சொத்துக்களும் பதிவேட்டில் பதியப்பட்டு இருக்க வேண்டும். | நான் ஒப்புக்கொள்கிறேன் நிலையான சொத்துக்கள் பதிவேடு புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது எனினும், எதிர்காலத்தில் அந்த தவறு நடைபெறாது. |

**1.6.4 பணப்புழக்க அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய வருமானம் அல்லாத வரவு ரூபா 1,249,278,798 ஆயினும் பணப்புழக்க அறிக்கையின் செயற்பாடு நடவடிக்கைகளில் அன்றாட நடவடிக்கையால் பெறப்பட்ட பணம் ரூபா 5,793,262,818 ஆக அதிகமாக காட்டப்பட்டு இருந்தது. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானம் அல்லாத வரவுகள் சரியாக கண்டறியப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். | சீர்திருத்த படிவத்திற்கு அமைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது குறைகள் ஏற்பட்டு இருப்பின் 2019 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுகக்ள் தயாரிக்கும் போது அவ்வாறான குறைகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்துள்ளது. |
| (ஆ) | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட மாதாந்த கணக்கு சுருக்கம் மற்றும் வேறு தகவல்களுக்கு அமைய செயல்பாட்டு நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் ரூபா 1,243,550.44 ஆக இருப்பினும் பணப்புழக்க அறிக்கையில் அது ரூபா 2,971,633,037 ஆக காட்டப்பட்டுள்ளதால் ரூபா 1,728,082,893 பெறுமதியான தொகையின் வேறுபாடு மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது. | பணப்புழக்க அறிக்கையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்ட பணப்புழக்கம் சரியாக குறிக்கப்பட வேண்டும். | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு கடன் மீதி ரூபா 16,776,127 ஆக அறவிட்டு இருப்பினும் பணம் புழக்க அறிக்கையில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் அது குறிக்கப்பட்டு இருக்கவில்லை. | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு கடன்மீதி அறவிடுவதற்கு முதலீட்டு நடவடிக்கைகள் கீழ் காட்டப்பட வேண்டும். | - மேற்படி - |
| (ஆ) | பணப்புழக்க அறிக்கையில் முதலீட்டு நடவடிக்கைகளின் ரூபா 22,504,771 | அரசாங்க கணக்குகள் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| ஆக இருக்கவேண்டி இருப்பினும் அது ரூபா 3,133,384,349 ஆக காட்டப்பட்டு இருப்பதனால் ரூபா 3,110,879,578 பெறுமதியான தொகையின் வேறுபாடு மேற்பார்வை செய்யப்பட்டுள்ளது. | சுற்றிக்கையின் பிரகாரம் பணப்புழக்க அறிக்கையின் ஒவ்வொரு நடவடிக்கைகளின் கீழ் விடும் கொடுக்கல் வாங்கல்கள் சரியாக குறிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | |

### 1.6.5 முற்பண கணக்கு மீதி

அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகளின் வருட இறுதியின் மீதி சம்பந்தமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் மேற்பார்வை செய்யப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உத்தியோகத்தர்கள் 10 பேர்களில் அறவிடப்பட வேண்டிய கூட்த்தொகை ரூபா 869,100 வாக கடன்மீதி 01 வருடம் தொடக்கம் 29 வருட காலப்பகுதிக்குள் வருமதியாக இருக்கின்றபோதிலும் அவை தீர்க்கப்படாது காணப்பட்டது. | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதி 118 இலக்கம் உடைய தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றிக்கையின் பிரகாரம் செயற்படுத்தி தீர்க்க வேண்டும். | இணங்கிக்கொள்கிறேன் |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கின் மீதி திறைசேரி ஏடுகளின் படி ரூபா 34,851,438 ஆகவும் அமைச்சரவை ஏடுகளின் படி ரூபா 34,794,669 ஆக பதியப்பட்டு இருந்த போதிலும் அதன்படி ரூபா 56,796 பெறுமதியான தொகையின் வேறுபாடு கண்டுபிடித்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 427 இன் படி அமைச்சரவை ஏடுகள் திறைசேரி ஏடுகள் உடன் ஒப்பிட்டு வித்தியாசம் கண்டுபிடிக்க வேண்டும். | நான் ஒப்புக்கொள்கின்றேன். இந்த வித்தியாசத்தை சரி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 1.6.6 கட்டுநிதி மீதி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்திலே திறைசேரி கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 92,000 ஆயினும் அது நிதிக்கூற்றுக்களில் ACA 03 ஆம் படிவத்தில் குறிப்பிட்டு இருக்கவில்லை. | முன்னைய வருடத்திற்கு உரிய கட்டுநிதி இருப்பின் அது ACA 03 ஆம் படிவத்தில் குறிப்பிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நான் ஒப்புக்கொள்கிறேன். எதிர்வரும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அத்தவறுகள் ஏற்பாடாதிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.7 ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அமைச்சின் மூலம் கீழே காணப்படும் சில ஏடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. ஆயினும் சில ஏடுகள் கட்டுப்பாடுடன் மற்றும் புதுப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை மாதிரி கணக்காய்வுகளின் போது மேற்பார்வை செய்யப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **பிணை வைப்பு பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையாளர்களின் விபரம் உள்ளடக்கப்பட்ட பிணை பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் படி பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக பிணை பதிவேடு பேணப்பட்டிருத்தல் வேண்டும். | சேவையாளர்களின் பிணை வைத்தல் சம்பந்தமாக எதிர்காலத்தில் மத்திய திறைசேரி உடன் கலந்தாலோசித்து அவசியமான படிமுறைகளை மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ)** | **நட்டம் சம்பந்தமான பதிவேடுகள்** | | |
| | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்பு சம்பந்தமான ஏடுகள் புதுபிக்கப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 விதிகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத் பிரகாரம் இழப்புக்கள் சம்பந்தமான பதிவேடுகள் புதுப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | நட்டம் மற்றும் இழப்புக்கள் ஏடுகள் கட்டுப்பாட்டுடன் புதுப்பிக்கப்பட்டு பேணப்பட எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |

### 1.6.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிறது.

| | சட்ட திட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் குறிப்புக்கள் என்வற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்களின் கோவை (நி.பி) 1646 | வாகனத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களினால் எல்லா மாதங்களுக்கும் பின்னர் வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் 268(அ) பொது படிவத்தில் எழுதப்பட்ட மாதாந்த சுருக்கத்தின் முதற்பிரதியுடன் நாளாந்த ஓட்ட குறிப்பின் பதிவுகள் கணக்காய்வு தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்க வேண்டி இருப்பினும் அவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டிரக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் உரிய திகதிக்கு மாதாந்த சுருக்கத்தின் பிரதியொன்றுடன் நாளாந்த ஓட்டக் குறிப்பு பதிவுகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்க நடவடிக்கை மேறகொள்ளப்பட வேண்டும். | நான் ஒப்புக்கொள்கிறேன். 2019 சனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களின் நாளாந்த ஒட்டக்குறிப்பு பதிவுகள் 2019 ஜுன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு அதிகார சபையிடம் முன்வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகிறது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டின் அரசிற்கு சொந்தமான மொத்த ஹெக்டயார் 249,843 பரப்புடைய காணி பிரதேச பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்கள் 23 ற்கு 53 வருட காலமாக வாடகை குத்தகை அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருந்த 2018 தெசம்பர் 31 ஆந் திகதிக்கு அந்த நிறுவனங்கின் ஊடாக 11 நிறுவனங்களினால் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா மில்லியன் 511.62 பெறுமதியான குத்தகை வருமானம் வருமதியாக இருப்பினும் அந்த தொகையை அறவிடுவதற்கு ஏற்ற ஒப்பந்தத்திற்கு அமைய | கொடுப்பனவு கட்டணம் செலுத்தாது கைவிடும் நிறுவனங்கள் சம்பந்தமாக ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்ட விதிகளின் படி நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | 2018 தெசம்பர் 31 ஆந் திகதிக்கு பெருந்தோட்ட கைத்தெரில் நிறுவனங்கள் 11 இனால் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய குத்தகை தொகை ரூபா 511,623,964 பெறுமதியான தொகை 2018 ஆம் ஆண்டிற்குள் வருமதி வாடகை குத்தகை தொகை மற்றும் வருடாந்த வாடகை குத்தகை அறவிடுவதற்காக இயலுமான அனைத்து செயற்பாடுகளையும் செய்யப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஆ) | பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்களுடன் ஏற்படுத்தி கொண்டிருந்த வாடகை குத்தகை திருத்த ஒப்பந்தத்திற்கு அமைய ஒவ்வொரு காலாண்டிற்கும் அதில் குறிப்பிட்டுள்ள உரிய திகதிக்கு காலந்தாழ்த்தப்பட்ட வாடகை குத்தகை செலுத்தாததனால் அந்த வருமான வரவு தாமதமாக இருந்தது. | ஒவ்வொரு காலாண்டிற்கும் அதில் குறிப்பிடப்படட உரிய திகதிக்கு வாடகை குத்தகை பெற்றக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | 1995 நவம்பர் 27 ஆந் திகதி இல. 1558 உடைய காலந்தாழ்த்தப்படட குத்தகை சீர்திருத்த ஒப்பந்தம் பொருந்துவது குருநாகல் பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனத்திற்காகும் குருநாகல் பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனம் அரசாங்கத்தின் கீழ் காணப்படுகிறது என்பதால் அந்த நிறுவனத்தினால் வாடகை குத்தகை கொடுப்பனவு முற்றுமுழுதாக கைவிடப்பட்டு இல்லை என்பதால் அவர்களின் கணக்கீடுகள் படி குறைந்த வாடகை குத்தகை செலுத்தப்படுகிறது. இது சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை சம்பந்தமாக நிதி அமைச்சின் செயலாளரிடம் ஆலோசனை கேட்டுள்ளார். |
| (இ) | 1992 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்கள் 23 ற்கு கொடுக்கப்பட்டுள்ள அரசிற்குரிய மொத்த ஏக்கர் 617,486 அளவுடைய தோட்டங்களின் ஏக்கர் ஒன்றிற்கு கிடைக்கின்ற வருடாந்த வாடகை குத்தகை வருமானம் ரூபா 433 ற்கும் ரூபா 2,780 ற்கும் இடையே குறைந்த மதிப்பு வரம்பு எடுக்கப்பட்டதில் இருந்து தற்காலத்தில் காணிகளின் வணிக பெறுமதியை கருத்திற் கொண்டு அறவிடப்படும் வாடகை குத்தகையை மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாடகை குத்தகை திருத்தச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | வருடாந்தம் அறவிடப்பட வேண்டிய வாடகை குத்தகை தீர்மானம் செய்யப்படடு இருப்பது அந்த நிறுவனங்களின் 1994 டிசெம்பர் 31 ஆந் திகதி காணப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதிகள் மீதாகும். எவ்வாறாயினும் பெரும்தோட்ட கைத்தொழில் நிறுவனங்களுடன் கையொப்பமிடப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள் நிபந்தனைகளின் நடைபெற வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாக இந்த அமைச்சின் மூலம் மத்திய திறைசேரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அமைச்சு மற்றும் அரச வணிகத்துறை முகவர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து இந்த விடயங்கள் உள்ளடக்கி ஒட்டுமொத்தமான குத்தகை ஒப்பந்தங்களில் மற்றும் உண்மையான பங்காளரதி உரிமைகளில் நடைபெற வேண்டிய வேறுபாடுகள் பரிந்துரையாக பெற்று கொண்டு மேல் மட்டத்தின் கொள்கை முடிவுகள் பெறுவதற்காக அந்த பரிந்துரைகள் முன்வைக்க எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 1992 ஆம் ஆண்டின் அரசிற்கு சொந்தமான பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விடும் போது வாடகை குத்தகை கணக்கீடு செய்யும் போது தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா மில்லியன் 200 ஐத் தாண்டி இருக்க வேண்டும். அதனடிப்படையில் அந்நாளின் வருமானத்திற்கு குறைந்த பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்கள் 03 இற்கு காணி ஹெக்டெயர் 20,757 வாடகை குத்தகை இல்லாமல் பெற்றுக்கொடுத்து 26 வருடங்கள் கடந்துள்ளதாயின் நிகழ்காலத்தில் அதில் நிறுவனம் இரண்டின் தேறிய சொத்து ரூபா மில்லியன் 200 தாண்டி காணப்பட்டதாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் சம்பந்தமாக குத்தகை வழங்கல் ஒப்பந்தத்தின் ஏற்பாடு செய்து இல்லை. என்பதால் வாடகை குத்தகை அறவிடுவதற்கு முடியவில்லை. | அரசிற்கு சொந்தமான தோட்டங்களில் தேறிய சொத்துக்களின் பெறுமதி சம்பந்தமாக திரும்ப ஆய்வு செய்து குத்தகை அறவிட வேண்டிய தோட்டங்களின் குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | ஒட்டுமொத்தமாக எல்லா பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்கள் ஒப்பந்தமிடப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் நடைபெற வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாக இந்த அமைச்சரவையின் மூலம் மத்திய திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (உ) | 2017 பெப்ரவரி 15 ஆந் திகதி இல PE/PL/Gen/2017 உடைய அரச வணிகத்துறை பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கமைய அரசாங்க காணிகள் உப குத்தகைக்கு கொடுப்பதன் மூலம் ஈட்டிய வாடகை வருமானத்தின் நூற்றுக்கு 20 ஆன கட்டணம் திரட்டு நிதிக்கு அறவிடுவதற்கு கட்டளையிட்டுள்ளது. அப்படி இருந்தும் 2017 ற்கு முன்னர் துணை குத்தகைக்கு கொடுத்து இருந்த பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்கள் 05 இற்கு 2015 ஆம் ஆண்டிற்கும் உரிய ரூபா மில்லியன் 36.51 பெறுமதியான தொகை வருமானமாக கிடைக்கப் பெற்றிருப்பினும் அந்த நிறுவனங்களின் நூற்றிற்கு 20 சதவீதம் அரசிற்குரிய பகுதி அறவிட்டு கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப குத்தகைக்கு விடுதலின் பெற்றுக்கொள்ளும் வாடகை வருமானத்தின் நூற்றிற்கு 20 வீதமான கட்டணங்கள் திரட்டு நிதிக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்கள் 03 ற்கு மட்டும் உப குத்தகை வழங்கப்பட்டிருந்ததுடன் அது பின்வரும் செயன்முறைப்படி செயற்படுகின்றது. அதன்படி நூற்றிற்கு 20 வீதமான பகுதி அரசிற்கு பெற்றுக்கொள்வதற்காக அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளதுடன் அப் பணம் செலுத்தும் வரை அந்த நிறுவனங்களின் காணிகள் மீண்டும் உப குத்தகைக்கு விடுதலை நிறுத்தியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | குத்தகை ஒப்பந்தத்தின் பிரகாரம் அரசின் அவசியத்தின் பேரில் பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் மீண்டும் கைப்பற்றிக்கொள் திறன் இருந்த போதிலும் பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்களினால் ஏக்கர் 01 இன் அளவு இலங்கை விமானப்படையினருக்கு 2045 ஜுன் 17 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு வருடாந்தம் ரூபா மில்லியன் 12.32 ற்க துணை குத்தகைக்கு பெறுமதியின் கீழ் மீண்டும் அரசாங்க நிறுவனமொன்றிற்கு பெற்றுக் கொடுத்து இருந்தது. | அரசின் அவசியத்திற்கமைய பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்கள் மீது பெற்றுக்கொடுத்த காணிகள் மீண்டும் கைப்பற்றிக்கொள்ள திறன் இருந்த போதிலும் பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்களினால் வாடகை குத்தகை பெற்றுக்கொண்டு அந்த காணிகள் மீண்டும் அரசின் நிறுவனங்களுக்கு குத்தகைக்கு விட்டிருப்பது மூலம் ஈட்டிக் கொள்ளும் வருமானத்தை அரசிற்கு பெற்றுக்கொள்ள கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்தல் | இணங்கிக்கொள்கிறேன் |

**2.2 செலவு முகாமைத்துவம்**

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் மூலதன செலவுப் பொருள் செலவு விடயத்தில் 12 ற்கு சேகரிக்கப்பட்ட மொத்தம் ரூபா மில்லியன் 2256 ஆக ஒதுக்கப்பட்ட நிதிகளின் மொத்த பெறுமதியின் ரூபா மில்லியன் 963 பெறுமதியான தொகை பயன்படுத்தப்படாது மீதமாக உள்ளது. | வருடத்தின் மூலதன செலவு பொருள் செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி பயன்படுத்த கூடியவாறு திட்டமிட்ட காலப்பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட நிதியை வேண்டப்பட வேண்டும். | மூலதன செலவுப் பொருள் அளவு விடயத்திற்கு ஏற்ற ஒதுக்கப்பட்ட நிதியின் மீதியாக இருப்பது சம்பந்தமாக மத்திய திறைசேரியின் உரிய முறையில் ஒதுக்கிய பணம் கிடைக்காது பிரதான காரணமாக இருப்பதால் அரச கொள்கைகளின் படி சில செயற்திட்டங்கள் இடையில் நிறுத்துவதற்கு மற்றும் சில செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு வரை ஒத்தி வைக்க நிகழ்ந்தது. பயன்படுத்தப்படாது மீதி இருப்பதற்கு காரணமாகியது. |
| (ஆ) | அபிவிருத்தி துணை திட்டங்கள் 04 ற்காக துணை மதிப்பீடு ஒதுக்குதல் மூலம் பெற்று தந்துள்ள ரூபா மில்லியன் 425 பெறுமதியான ஒதுக்கப்பட்ட நிதி ரூபா மில்லியன் 314.71 பெறுமதியான தொகை பயன்படுத்தாது மீதமாக | துணை மதிப்பீடு மூலம் நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொள்ள முன்னர் நிதி ஒதுக்கீடு அவசியமா என்பதை தீர்மானித்தல் வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

எஞ்சியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் செலவு விடயங்களின் 04 ற்காக பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் நூற்றிற்கு 85 வீதத்தை நூற்றிற்கு 100 ற்கு இடையே உள்ள பெறுமதியான தொகை நி.பி 66 இன் கீழ் வேறு செலவு விடயத்திற்கு மாற்றப்பட்டு இருந்தது. எனின் அந்த செலவு திட்ட என்னும் விடயங்களுக்காக வரவு, செலவு திட்ட மதிப்பீடு மூலம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருத்தல் பலனற்று போயின. | செலவு விடயங்களுக்காக வரவு, செலவு திட்ட மதிப்பீடு தயாரிக்கும் போது கவனத்திற் கொண்டு தயாரித்து இருத்தல் வேண்டும். | அமைச்சரவையின் விவகாரங்களை நடத்துவதன் மூலம் எதிர்வரும் ஆண்டுகளினுள் ஏற்பதற்கு எதிர்பார்க்கப்படும் செலவுகளுக்கு மதிப்பீடு தயாரிக்கும் போது சில சந்தர்ப்பங்களில் அந்த செலவுகை ஏற்பதற்கு அவசியம் இருக்காது. அதே போல் சில சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யப்படும் தொகையின் அளவு செலவு செய்வதற்கான போதாமையாக உள்ளதால் செலவு செய்ய தேவை ஏற்படாத செலவு விடயங்களின் நிதி ஒதுக்கீடு நி.பி 66 இன் கீழ் பணம் அவசியமாகும். செலவு தலைப்புக்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள. |

### 2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்து வைத்தலும்

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டு நிதிகளை அது வழங்கப்பட்ட காதியம் முடிவுற்று 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டி இருப்பினும், அமைச்சின் மூலம் 2018 ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்ட தொகையின் மொத்தம் ரூபா 219,990 ஆகும். உப கட்டு நிதி 19 செலுத்துவதற்காக 04 நாள் தொடக்கம் 09 நாட்களுக்கிடையே காலம் கடத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நான் ஒப்புக்கொள்கிறேன். இது சம்பந்தமான அமைச்சரவை உத்தியோகத்தர்களை அறிவுருத்தி இருப்பதுடன் எதிர்காலத்தில் தாமதம் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014/01 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சரவையின் செயல் | 2014 பெப்ரவரி 17 ஆந் தகிதி 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் | நான் ஒப்புக்கொள்கிறேன் 2019 திருத்தப்பட்ட செயல் திட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மற்றும் |

| | | |
|---|---|---|
| திட்டத்தை தயாரிக்கப்பட்டு இருப்பினும் அந்த செயல் திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் சம்பந்தமாக வருமானம் சேகரிக்கும் செயல் திட்டம், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திட்டம் என்பன முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. | பிரகாரம் நிறுவண அமைப்பினுள் உள்ளீட்டிருக்கும் எல்லா தேவைகளையும் செயற்திட்டதினுல் அடக்கப்பட்டிருத்தல் வேண்டும். | இப்பொழுது உள்ள பதவியிணர் சம்பந்தமான விபரம் ஒன்று உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டிற்கு உரிய மீள திருத்த வருமான கணக்கிடப்படும் பொழுது வருமானம் கூட்டப்படும் பொழுது செயல் திட்டத்தின் அடிப்படையில் செய்வேன்.<br><br>அங்கீகரிக்கப்பட்ட கணக்கிடப்படும் திட்டத்தின்படி வருடாந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி திட்டம் தயாரிக்கப்பட்டு இருந்த போதிலும் அது 2020 ஆம் ஆண்டு முதல் செயற்திட்டத்திற்கு உள்ளடக்கப்பட நடவடிக்கை எடுப்பேன்.<br><br>அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு இணங்க அந்த நிறுவனங்களின் தயாரிக்கப்பட்ட வருடாந்த கொள்முதல் திட்டம் அந்த நிறுவனங்களில் செயல் திட்டத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

**3.2 விரும்பிய வெளியீட்டு நிலைகளை அடைவதில் தோல்வி**

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ரூபா மில்லியன் 250 தொகை ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் சிறிய தேயிலை தோட்டப் பிரிவுகளின் உற்பத்தியினை அதிகரிப்பதற்கான செயற்திட்டங்களின் சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்காக நீர்த்தாங்கி 10,000 நீர் விசை இயக்க குழாய்கள் 3,500 மற்றும் ஸ்ப்ரே உபகரணங்கள் 4,500 பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகரித்திருந்தது. அப்படி இருந்தும் 2018 வருட இறுதியில் அதில் ஸ்ப்ரே இயந்திரங்கள் 1,456 கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் ரூபா மில்லியன் 18 பெறுமதியான தொகை சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி ஆணையம் மீது | எதிர்பார்த்த கால கட்டத்தில் பெறுகைகள் நடவடிக்கைகள் திட்டமிட்டு செயற்படுத்தியிருத்தல் வேண்டும். | ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கும் போது இருந்த ஒழுங்கற்ற காரணிகளை புதிய அமைச்சரவை காகிதம் ஒன்றை சமர்பித்து 2019 ஆம் வருடத்திலே இந்த செய்றதிட்டம் செய்வதற்கு அங்கீகாரம் எடுக்கப்பட்டது. அதன் காரணமாக சம்பந்தமான செயற்திட்டத்திற்காக துணை மதிப்பீடு மூலம் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 250,000,000 பெறுமதியான பணத்தின் ரூபா 231,966,712 பெறுமதியான தொகை மீதியாகியதுடன் அந்த |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொடுத்துள்ளதுடன் மீதி ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | ஒதுக்கீட்டு தொகையின் மீதியை துணை மதிப்பீடு தயாரிக்கப்படும் போது ஏற்பட்ட குறைபாடு இல்லலை என்பதை தயவு கூர்ந்து தெரிவித்துக்கொள்கிறேன். |

### 3.3 வெளிநாட்டு உதவி திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி பங்களிப்பின் கீழ் 2016 தொடக்கம் 2021 கால வரம்பக்குள் செயற்படுத்தப்பட்ட சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட மறுமலர்ச்சி திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டு ரூபா மில்லியன் 1,400 பெறுமதியான தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் தேயிலை தோட்டங்கள் 2,115 ஹெக்டெயரும் இறப்பர் தோட்டங்கள் 1,000 ஹெக்டெயரம் வீதிகள் 31 ஆம் அபிவிருத்தி செய்வதற்காக இலக்கு வைத்திருந்தது. அதில் சிறு தேயிலைத் தோட்டம் 1,344 ஹெக்டயரும் இறப்பர் காணி 293 ஹெக்டெயரும் விவசாய அணுகல் சாலைகள் 24 உம் நிறைவு செய்யப்பட்டதால் எதிர்பார்த்த இலக்கை நெருங்குவதற்கான திறமையினரை ஏற்பட்டு இருந்தது. | எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்கு திறமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி ஹெக்டெயர் 2449.13 ற்காக விண்ணப்படிவம் சிறு தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி ஆணையிடம் முன்வைக்கப்பட்டு இருந்ததுடன் அதில் ஹெக்டெயர் 1428.61 ற்கு மட்டும் அனுமதியாக்கப்பட்டுள்ளது. அதில் ஹெக்டெயர் 1344 ற்கு மட்டும் முற்கொடுப்பனவு நிறைவு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்காக இறப்பர் புதுச்செய்கைக்காக வன பாதுகாப்பு திணைக்களம் மகாவலி மேம்பாட்டு ஆணையம் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலத்திற்கு உரிய அரச நிலங்கள் அகற்றப்பட்டு கொள்ள மற்றும் சரியான முறைப்படி செய்வதற்கு நீண்ட காலம் ஆனது. கன்று நடுதல் ஆண்டின் இறுதி மாதம் வரை நடைபெற்றது எனினும், காணி ஹெக்டெயர் 293 ற்கு மட்டும் 2018 ஆம் வருடத்திற்குள் முற்கொடுப்பணவு கொடுக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டினுள் இந்த சகல செயற்திட்டங்களும் |

ஆரம்பிக்கப்பட்டதுடன் அந்த காலப்பகுதிக்குள் இடம் பெற்ற அதிக தழை காரணமாக திட்டமிட்ட சாலைகள் 165 ஆவது 2018 செப்தெம்பர் இறுதி காலப்பகுதிக்குள் நிறைவு செய்ய முடியாது போனது இவ்வாறு வேலை நிறைவு செய்யப்படாத சகல செயற்திட்டங்களும் 2019 ஆம் ஆண்டின் முதற் காலாண்டினுல் நிறைவு செய்யப்பட்டது.

**3.4 அரசாங்க ஊழியர்களுக்கு பிணை வழங்குதல்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அமைச்சரவை உத்தியோகத்தர்கள் 61 பேர்களின் மூலம் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. என்றாலும் நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம் 892 இன் பிரகாரம் பிணை வைப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்களின் பட்டியல் குறித்த மறு ஆய்வு செய்து அந்த அறிக்கை எல்லா முன் 03 வருடத்திற்கு இறுதியிலும் கணக்காய்வு தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச பணம் விநியோகம் அல்லது முத்திரை அல்லாவிடில் சரக்கு போன்றவை வழங்குதல் சம்பந்தமாக பரிபாலன வகையில் பொறுப்பு கூற வேண்டிய அல்லது அதிகார மன்றத்தின் கீழ் அந்த வேலையை கிடைத்துள்ள அல்லது உத்தியோகத்தர்களின் அரச கணக்கிற்குரிய வவுச்சர் இடப்பட்ட காசொலை கையொப்பமிட்டவர்கள் அவர்களின் கடமைகள் விடங்கள் நேர்மையாக செய்வதாக பிணை எடுக்கப்பட வேண்டும். | பணிப்பாளர் பிணை வைப்பு குறித்து எதிர்காலத்தில் மத்திய திறைசேரியுடன் கலந்துரையாடி அவசியமான படிமுறைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5 நட்டம் மற்றும் சேதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | 2018 செம்தெம்பர் 31 ஆந் திகதியாகும் போது இழப்புக்கள் நடைபெற்று 02 தொடக்கம் 07 வருடங்கள் இடைப்பட்ட காலத்திற்குள் நடைபெற்ற 22 நிகழ்வுகள் சம்பந்தமாக மொத்தம் ரூபா மில்லியன் 5.33 பெறுமதியான தொகை நட்டம் மற்றும் சேதங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டம் மற்றும் சேதங்களை அறவிடுவதற்கு அல்லது வெட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. | இந்த வாகனங்களின் 05 அமைச்சரவையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறு தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்திற்கு அடங்கும் வாகனங்களாகும். வாகன பராமரிப்பு நடவடிக்கைகள் போல வாகனம் சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளும் உரிய செயற்திட்டத்தின் மூலம் செய்துள்ளதுடன் செய்றதிட்டம் முடிவுற்ற பின் கோப்புக்கள் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. ரூபா 672,000 பெறுமதியான பணம் அரசிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வேறு சேதம் மற்றும் நட்டமாக காட்டப்பட்டுள்ள அளவுகள் காப்புறுதி தொகயையில் அறிவிடும் போது நடைபெற்றுள்ள கழிப்புக்கள் ஆகும். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து எதிர்காலதில் அறவீடுகள் மற்றம் கழிவுகள் சம்பந்தமாக அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | அமைச்சரவையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறு தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்திற்குரியதாக இருந்த 05 வாகனங்களுக்கு நடைபெற்ற அனர்த்தங்கள் 07 சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 104 (3) மற்றும் (4) இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டு இருக்க வேண்டிய பரீசீலனை அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பிரகாரம் இழப்புக்கள் நடைபெற்ற பின் அதன் படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருத்தல் | வாகனங்களிற்கு ஏற்பட்ட அனர்த்தங்களிற்கு ஏற்பட்ட இதுவரை நிதிப் பிரகாரமாக 104 இன் படி பரீசீலனை நடவடிக்கைகள் செய்து இல்லாத வாகனங்கள் அமைச்சரவையின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறு தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்குரியதாக இருந்த வாகனங்கள் என்பது |

| | | |
|---|---|---|
| | | உறுதி செய்யப்பட்டது. அந்த அனர்த்தங்கள் சம்பந்தமாக எதிர் காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ள பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. |

**3.6 முகாமைத்துவ மேலாண்மை பலவீனங்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| பிரதேச பெருந்தோட்ட கைத்தொழில் நிறுவனங்கள் 16 ற்கு குத்தகை அடிப்படையில் அரசு மூலம் கொடுக்கப்பட்டிருந்த காணிகளின் ஏக்கர் 795.96 மற்றும் அந்த தோட்டங்களுக்குரிய அரச நிதி 172 ற்கு அங்கீகாரமளிக்கப்படாத நபர்களினால் கைப்பற்றப்பட்டு உள்ளவை மீண்டும் திரும்ப பெற சட்டமுறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1979 இலக்க 07 உடைய அரச காணி (உடமை திரும்ப பெறல்) சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அங்கீகாரமளிக்கப்படாத குடியிருப்பாளர்களினை அகற்ற நடவடிக்கை எடுக்கும் போது பெருந்தோட்ட முகாமைத்தவ மேற்பார்வை பிரிவிற்கு வேறுபட்ட நிகழ்வுகள் இருப்பது மற்றும் சில மாவட்டங்களில் மாவட்ட தொடர்பு குழுக்கள் மூலம் அங்கீகாரமளிக்கப்படாத குடியிருப்பாளர்களை நீக்கி தீரணம் எடுக்கப்பட்டிருப்பது தாமதத்திற்கு காரணமாகியது. |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அமைச்சரவையின் சிரேஸ்ட மட்டத்திற்குரிய உதவி பணிப்பாளர் உதவி செயலாளர், கணக்காளர் இருவர் மற்றும் உள்ளக கணக்காய்வு ஆகிய பதவிகள் வருடத்திற்கு அதிக காலத்திற்குள் வெற்றிடங்கள் இருந்தது. | பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்ப வேண்டியுள்ளது. | அமைச்சரவையின் சிரேஷ்ட மட்டத்திற்குரிய உதவி பணிப்பாளர், உதவி செயலாளர், கணக்காளர், மற்றும் உள்ளக கணக்காய்வாளர் போன்ற பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை நியமிக்கும் படி வேண்டி அரச நிர்வாக / அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சிற்கு பல சந்தர்ப்பங்களில் கடிதம் அனுப்பி |

வைக்கப்பட்டிருப்பினும் இது சம்பந்தமாக உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.